**World Christian Fellowship**
**60, High Worple, Rayners Lane, Harrow**
Middlesex, HA2 9SZ, United Kingdom
Tel: +44 208 429 9292
www.wcflondon.com
wcflondon@gmail.com

# நோக்கம் - அன்பு

*தேவனுடைய அன்பில் ஆச்சரியப்படத்தக்க விஷயம் என்ன? என்னை அறிந்து அவர் நேசிக்கிறார் மட்டுமல்ல; நான் விரோதியாய் இருக்கும்போது அவர் என்னை நேசிக்கிறார் !*
*– ஆபிரகாம் டி. ஜான் (*Abraham D. John)

இந்த பூமியில் நாம் இருப்பதற்கான பிரதான நோக்கம் தேவனுக்கு ஒரு குடும்பம் தேவையாய் இருப்பதாகும் என கடந்த பாடத்தில் நாம் பார்த்தோம். அவர் உங்களை நேசிப்பதோடு, உங்களது தோல்வியான துக்கப்படுத்தும் கிரியைகள் இருந்தபோதிலும் தேவன் தமது மாறாத அபரிதமான அன்பை உங்கள் மீது பொழிகிறார்.

1 யோவான் 4:16
*தேவன் நம்மேல் வைத்திருக்கிற அன்பை நாம் அறிந்து விசுவாசித்திருக்கிறோம். தேவன் அன்பாகவே இருக்கிறார். அன்பில் நிலைத்திருக்கிறவன் தேவனில் நிலைத்திருக்கிறான். தேவனும் அவனில் நிலைத்திருக்கிறார்.*

தேவனுடைய குணாதிசயமே அன்பு! தேவன் அன்பை உடையவராக இருக்கிறாரென்று சொல்லப்படாமல், தேவன் அன்பாகவே இருக்கிறார் எனப்படுகிறது.

1 யோவான் 4:8
*அன்பில்லாதவன் தேவனை அறியான். தேவன் அன்பாகவே இருக்கிறார்.*

எந்தவித நிபந்தனையுமில்லாமல் நம்மை நேசிக்கும் ஆச்சரியமான அன்பான தேவன் நமக்குண்டு என்பதை மக்கள் நித்தம் உணர்வதில்லை. படைப்பில் தேவன் ஏதேன் தோட்டத்தை உண்டாக்கிவிட்டு அதனை பராமரிப்பதற்கு ஒரு தோட்டக்காரனைத் தேடவில்லை. ஏதேன் தோட்டத்தில் மனிதனை அதன் நடுவில் வைத்தார். ஆகவே மனிதன் அதனை ஆளுகை செய்யவும் அவருடைய அன்பில் திழைத்திருக்கவும் செய்தார். எப்படியாயினும் மக்கள் இந்த முக்கிய காரணத்தை கருத்தில் கொள்ளத் தவறிவிட்டனர். தேவன் அவருடைய தோட்டத்தைக்

கவனிப்பதற்கு ஒருவனைத் தேடியிருந்தால், அவருடைய வார்த்தையினால் அது உண்டாயிருக்கும்.

எபேசியர் 2:4

*தேவனோ இரக்கத்தில் ஐசுவரியமுள்ளவராய் நம்மில் அன்புகூர்ந்த தம்முடைய மிகுந்த அன்பினாலே,*

உங்கள் மீது ஆச்சரியமான அன்பைக் கொண்டிருக்கும் தேவன். எப்போது இவைகளெல்லாம் நிகழ்ந்தது? எப்படி எப்போது தேவன் உங்களை அன்பு செய்ய ஆரம்பித்தார்?

எமது வேதாகமத்தில் ஆரம்பத்தில் ஆதியாகமம் 1:1ல் ஆரம்பிக்கிறது. அதற்கு முன்பதாக இரண்டு வசனத்தை ஒழுங்கின்படி பார்த்தால் உங்களுக்கு இதனை புரிந்து கொள்ள முடியும்.

யோவான் 1:1 *ஆதியிலே வார்த்தை இருந்தது. அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது. அந்த வார்த்தை தேவனாயிருந்தது.*

அடுத்ததாக, எபேசியர் 1:4-6

*தமக்கு முன்பாக நாம் அன்பில் பரிசுத்தமுள்ளவர்களும் குற்றமில்லாதவர்களுமாயிருப்பதற்கு அவர் உலகத்தோற்றத்துக்கு முன்னே கிறிஸ்துவுக்குள் நம்மைத் தெரிந்துகொண்டபடியே, பிரியமானவருக்குள் தாம் நமக்குத் தந்தருளின தம்முடைய கிருபையின் மகிமைக்குப் புகழ்ச்சியாக, தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படியே நம்மை இயேசுகிறிஸ்து மூலமாய்த் தமக்குச் சுவிகார புத்திரராகும்படி முன்குறித்திருக்கிறார்''.*

இப்போது, ஆதியாகமம் 1:1ல் *ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார்.*

தேவன் எல்லாவற்றையும் படைக்கும் முன்பே உங்களைக் குறித்து அவருடைய மனதில் எண்ணம் இருந்தது. அவர் உங்களைத் தன் எண்ணத்தில் கொண்டிருந்தார். அத்தனை அன்பு உங்கள் மீது அவருக்கு இருந்தது.

எபேசியர் 1:4லும் இந்த வாக்குத்தத்த வசனம் குறிப்பிடப்படுகின்றது. இந்த உலகத்தின் அத்திவாரத்திற்கு முன்பே, தேவன் தன் குடும்பத்திற்குள் உங்களைத் தெரிந்தெடுத்துள்ளார்.

- எப்போது இது நடந்தது? எல்லாம் உண்டாகும் முன்பே!
- அது கடந்து வருகிறதா? அவருடைய திட்டங்கள் மாற்றமடைவதில்லை!!
- ஏன்? ஏனென்றால் அது அவரை சந்தோஷப்படுத்துகிறது!!!

நீங்கள் தேவனுடைய கரங்களால் நிர்மாணிக்கப்பட்ட அழகான ஆச்சரியமான ஒரு படைப்பு!

மக்கள் தேவனுடைய அபரிதமான அன்பை புரிந்துகொள்ளாதவர்களாய் துக்கரமான வாழ்க்கையை லூக்கா 15 அதிகாரத்தில் சொல்லப்பட்டப்படி ஊதாரி மகனுடைய வாழ்க்கையைப் போல வாழ்கிறார்கள். தேவ சபைகளிலுள்ள அநேக மூத்த சகோதரர்கள் தவறான கருத்துகளுடன் தேவனை உண்மையாய் சேவிக்கிறார்கள்.

தேவன் இயேசுவை நேசித்ததைப் போல உங்களை நேசிக்கிறார். தேவன் உங்களை நேசிக்கிறார் அல்லது தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக என்பது பொதுவான வாழ்த்துதல் வார்த்தைகளாக உள்ளன. தேவன் அன்பை உடையவராக இருக்கிறாரென்பதைவிட தேவன் அன்பாகவே இருக்கிறார் என்பதை நாம் புரிந்துகொண்டுள்ளோமா? இதன் அர்த்தத்தை உணரத் தவறியவர்களாக அதனை எதேச்சையாக கூறிக்கொண்டிருக்கிறோம். லண்டன் நாட்டில் வாழ்பவர்கள் புதிதாக நாட்டிற்கு வந்தவருக்கு Westminster Abbey (வெஸ்ட்மின்ஸ்டர் அபே) அல்லது Buckingham Palace (பக்கிங்ஹாம் மாளிகை) அறியாதவர்களாக இருந்தால், சில தினங்களுக்கு தேடி செல்வதைப் போன்றதாகும்.

யோவான் 3:16 ‘‘தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்.’’ - இப்பகுதி அநேகர் அறிந்துணர்ந்த வசனமாகும். இதில் குறிப்பிடத்தக்க விடயமும் அறிந்து கொள்ள கடினமானதுமான விடயம் என்னவெனில் ஒவ்வொருவரையும் குறித்த அவருடைய அன்பு வெவ்வேறுப்பட்டது. ஒவ்வொரு தனிமனிதனுக்கும் தேவனுடைய அன்பு தனித்துவமானது. தேவன் போலியான மாதிரியை உருவாக்கவில்லை. அவர் குளோனிங் முறை போன்ற செயற்கை வியாபாரத்தை உடையவருமல்ல. நீங்கள் தேவனால் உருவாக்கப்பட்ட தனித்துவமான ஆச்சரிய படைப்பு.

சங்கீதம் 139:13-16 விவரிக்கிறது:

> *நீர் என் உள்ளிந்திரியங்களைக் கைக்கொண்டிருக்கிறீர். என் தாயின் கர்ப்பத்தில் என்னைக் காப்பாற்றினீர். நான் பிரமிக்கத்தக்க அதிசயமாய் உண்டாக்கப் பட்டப்படியால், உம்மைத் துதிப்பேன். உமது கிரியைகள் அதிசயமானவைகள். அது என் ஆத்துமாவுக்கு நன்றாய் தெரியும். நான் ஒளிப்பிடத்திலே உண்டாக்கப்பட்டு, பூமியின் தாழ்விடங்களிலே விசித்திர விநோதமாய் உருவாக்கப்பட்டபோது, என் எலும்புகள் உமக்கு மறைவாய் இருக்கவில்லை. என் கருவை உம்முடைய கண்கள் கண்டது.*

*என் அவயவங்களில் ஒன்றாகிலும் இல்லாதபோதே அவைகள் உருவேற்படும் நாட்களும், உமது புஸ்தகத்தில் எழுதியிருந்தது.*

நீங்கள் ஒரு ஆச்சிரிய படைப்பு!!



உங்கள் சரீரம் ஒரு விந்தையான ஆச்சரியம்! மனிதனின் சரீரத்தைக் குறித்த ஆயிரக்கணக்கான சிக்கலான ஆராய்ச்சிகளின் பிறகு, விஞ்ஞானிகள் இதன் சிக்கலான தன்மைக்குறித்து தாங்கள் அறிந்திருந்த கொஞ்சத்தைக் குறித்து பிரமிக்கிறார்கள்.

உங்கள் பெருவிரலின் ரேகை அடையாளமானது, நீங்கள் உங்கள் தாயின் கருவில் இருக்கும்போதே உருவமைக்கப்பட்டது. அதைப்போன்ற வேறு இல்லாத - குறிப்பிடத்தக்க இறுகலான பிடிப்பைக் கொண்டிருப்பதாக கிரகிக்ககூடியதாக உள்ளது. ஒவ்வொரு விரலடையாளமும் கிட்டத்தட்ட 70 தொடக்கம் 100 வரையிலான வித்தியாசமான கோடுகளையுடையதாக உள்ளது. உங்களுக்குத் தெரியுமா? உங்கள் பெருவிரல் அடையாளம் வேறு எந்த ஒரு நபருடைய பெருவிரலின் அடையாளத்தையும் ஒத்ததாக அமையாது.
உயிரோடிருப்பவராக இருந்தாலும் சரி, மரித்தவராக இருந்தாலும் சரி பில்லியன் எண்ணிக்கையிலான மக்களுக்குள் இப்படியாக காணப்படுகிறது. ஒரு பெருவிரலில் உங்களுக்கு இத்தனை தனித்துவத்தை படைப்பதற்கு முயற்சித்திருக்கும் தேவன் உங்களைக் குறித்து எவ்வளவு கரிசனையுள்ளவராக அன்புள்ளவராக இருப்பார்? நீங்கள் தேவனுடைய செய்கையாயிருக்கிறீர்கள் என்பதை மறந்துவிடாதீர்கள். நீங்கள் ஒரு தவறுதலான படைப்பு அல்ல.

எபேசியர் 2:10

> *ஏனெனில், நற்கிரியைகளை செய்கிறதற்கு நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டு, தேவனுடைய செய்கையாயிருக்கிறோம். அவைகளில் நாம் நடக்கும்படி அவர் முன்னதாக அவைகளை ஆயத்தம் பண்ணியிருக்கிறார்.*

மூல எபிரேய வார்த்தையான "ποίημα" (*poiēma*) ஆங்கிலத்தில் "poem" என்று சொல்லப்பட்ட போதிலும் ஆங்கிலத்தில் NKJV மொழிபெயர்ப்பில் கைக்கிரியை என்றும் NLT மொழிபெயர்ப்பில் தலைமையான கிரியை என்றும் சொல்லப்படுகிறது. ஒரு கவியை ஒருவர் இயற்றுமுன் அவர் அந்த நபருடைய அல்லது இடத்தினுடைய அல்லது பொருளினுடைய அன்பில் திழைத்திருக்க வேண்டும். அப்போது தான் அந்த கவியானது அதனைப் பற்றியதாக அமையும். சற்று கற்பனை செய்து பாருங்கள், உங்களை தன் தலைமைக் கிரியையாக அவர் உருவாக்க எத்தனை அன்பை உங்கள் மீது வைத்திருக்க வேண்டும். அவருடைய உள்ளத்திலிருந்து அன்பின் கவி உருவாகிறது.

நீங்கள் தனித்துவமானவர் !

இப்பிரபஞ்சத்தில் உங்களை போன்ற ஒருவரும் இல்லை !!

உங்களைப்போன்ற நல்ல குணாதிசயமுடைய திறமையுள்ள வேறொருவர் இல்லவே இல்லை !!!




தேவன் இயேசுவை நேசித்த பிரகாரம் உங்களையும் நேசிக்கிறார்

யோவான் 17:23 *ஒருமைப்பாட்டில் அவர்கள் தேறினவர்களாயிருக்கும்படிக்கும், என்னை நீர் அனுப்பினதையும், நீர் என்னில் அன்பாயிருக்கிறது போல அவர்களிலும் அன்பாயிருக்கிறதையும் உலகம் அறியும் படிக்கும், நான் அவர்களிலும் நீர் என்னிலும் இருக்கும்படி வேண்டிக் கொள்கிறேன்.*

தேவன் இயேசுவை நேசித்த பிரகாரம் என்னையும் நேசிக்கிறார்!

தேவன் இயேசுவை நேசித்த பிரகாரம் உன்னையும் நேசிக்கிறார்!!

உங்கள் மனதில் இந்த உண்மையை பத்திரப்படுத்தி வைத்துக்கொள்ளுங்கள்.

இயேசு ஒரு பாதுகாப்பைப் பெற்றிருந்தார், அது என்னவெனில் தேவன் அவரை நேசிக்கிறார் என்பதாகும். எனவே அவருக்குள் எப்பொழுதும் பாதுகாப்பற்றத் தன்மை இருக்கவில்லை. தேவன் இயேசுவை நேசித்த பிரகாரம் நம்மையும் நேசிக்கிறார். அதுவே நம்முடைய பாதுகாப்பு. நாம் அவருடைய அன்பிற்குள் இருப்பதால் பாதுகாப்பு அற்றத்தன்மை நமக்குள் இருக்கக்கூடாது. தேவனுடைய பிள்ளையாக நமக்கு பாதுகாப்பு உண்டு. வேறென்ன....

மக்கள் உங்களை மறந்துவிடலாம், விட்டுவிடலாம், கேலி செய்யலாம், உங்களை நோக்கி கல் எறியலாம். ஆனால் தேவன் உங்களை நேசிக்கிறார். எப்பொழுதும் உங்களோடிருக்கிறார். தேவனுடைய அன்பு அவருடைய திட்டத்தின்படி உங்களைப் பாதுகாக்கிறது. ஆகவே உங்கள் வாழ்க்கையின் நோக்கமானது தேவனுடைய சித்தத்தை நோக்கியதாக இருக்கவேண்டும். எந்த தடுமாற்ற நிலையும் கஷ்டநிலையும் உங்களை அசைப்பதில்லை.

கஷ்டநிலையில் இயேசுவை நோக்கிப் பாருங்கள்.

யோவான் 16:32

*இதோ, நீங்கள் சிதறுண்டு, அவனவன் தன்தன் இடத்துக்குப் போய், என்னைத் தனியே விட்டுவிடுங்காலம் வரும். அது இப்பொழுது வந்திருக்கிறது. ஆனாலும் நான் தனித்திரேன். <u>பிதா என்னுடனே கூட இருக்கிறார்.</u>*

இயேசு மேலே கூறப்பட்ட வார்த்தையை கூறியது சிலுவைக்கு போவதற்கு சற்றுமுன்பு ஆகும். குறுகிய 3 வருடங்களாக சமூகத்திற்கு ஊழியம் செய்தார். அவரைப் பின்தொடர்ந்த அநேகரை சுகப்படுத்தி, அவர்கள் மத்தியில் அற்புதம் செய்தார். 11 சீஷர்களும் மிகச் சீக்கிரத்தில் அவரை விட்டு நழுவிவிட்டனர். மேலே சொல்லப்பட்ட வசனத்தை ஒரு நிமிடம் சிந்தித்துப் பாருங்கள். இயேசு தான் தனிமையானவர் அல்ல என மிக உறுதியாகச் சொல்கிறார். உங்களுக்கும் தேவனுடைய அத்தகைய அன்பின் பாதுகாப்பு இருக்கிறதா? நீங்கள் தேவனுடைய அன்பில் பாதுகாப்பாய் இருப்பீர்களானால் உங்களில் நிச்சயமாய் பயம் இல்லை.

அநேகர் விசுவாசம் என்ற சொல்லிற்கு எதிர்ப்பதம் பயம் என்று சிந்திக்கிறார்கள் அல்லது கற்பிக்கப்படுகிறார்கள்.

1 யோவான் 4:18 இப்படிச் சொல்கிறது: ''*அன்பிலே பயமில்லை. பூரண அன்பு பயத்தைப் புறம்பே தள்ளும். பயமானது வேதனையுள்ளது. பயப்படுகிறவன் அன்பில் பூரணப்பட்டவன் அல்ல*''

ஆகவே, தேவனுடைய அன்பை உங்களுக்குள் கொண்டிருப்பீர்களானால், அது பயத்தைப் புறம்பே தள்ளிவிடும். தேவனுடைய அன்பு பூரணமாக கிரியை செய்து ஒவ்வொருவிதமான பயத்தையும் புறம்பே தள்ளுவதற்கு உங்களுக்கு உதவும். ஆகவே தேவனுடைய பாதுகாப்பு எமக்குண்டு.

எபிரேயர் 13:5

> *''நான் உன்னை விட்டு விலகுவதுமில்லை. உன்னைக் கைவிடுவதுமில்லை''*

இயேசுவினுடைய வாழ்க்கையைப் பாருங்கள். அவருடைய பிறப்பிலிருந்து இறப்புவரை எல்லாமே வேதாகமத்தில் முன்னமே தீர்க்கதரிசனமாக சொல்லப்பட்டிருந்தது. 300க்கு மேற்பட்ட தீர்க்கதரிசனங்கள் நிறைவேறியது. சிலவற்றைக் கூறினால், அவருடைய பிறப்பிடம், எகிப்துக்கான அவருடைய வருகை, அவருடைய சிலுவை மரணம்... ஒவ்வொரு தடவையும் தீர்க்கதரிசனங்கள் நிறைவேறியது. வேதம் சொல்கிறது தீர்க்கதரிசனங்கள் நிறைவேறும்படி எல்லாம் நடந்தது. (மத்தேயு 26:54,56 மாற்கு14:49, 15:28 லூக்கா4:21, 24:44 யோவான் 13:18, 17:12, 19:24 19:28)

ஆகவே, இயேசுவின் வாழ்வில் நடைபெற்ற ஒவ்வொரு சம்பவமும் முன்னமே தீர்மானித்து நடைபெற்றது. அவருடைய பிறப்பு, ஊழியம், கைது, சிலுவை மரணம், உயிர்த்தெழுதல் அவருடைய வருகை உட்பட.

வெளிப்படுத்தல் 13:8

> "<u>உலகத்தோற்றமுதல் அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியினுடைய</u> ஜீவபுஸ்தகத்தில் பேரேழுதப்பட்டிராத பூமியின் குடிகள் யாவரும் அதை வணங்குவார்கள்."

இந்த வசனமானது தெளிவாகச் சொல்கிறது, உலகத்தோற்றத்திற்கு முன்பே இயேசு கொலைசெய்யப்படுவதாக இருந்தது. தேவன் இயேசுவின் வாழ்வில் ஒவ்வொரு காரியத்தையும் திட்டமிட்டிருந்தார். <u>உங்களைக் குறித்தும் தான்.</u> ஏனென்றால் அவர் உங்களை நேசிக்கிறார். தேவன் இயேசுவுக்கு அப்படிச் செய்தாரானால் அதே பிரகாரம் அவர் நம்மையும் நேசிக்கிறார். ஆகவே நானும் நீங்களும் பாதுகாப்பற்ற தன்மையையும் கவலையும் அடையவேண்டுமா?

இந்த உண்மையை உங்கள் வாழ்வில் உணர்ந்திருக்கிறீர்களா? நீங்கள் இப் பிரபஞ்சத்தில் ஒரே ஒருவராக இருந்திருந்தாலும் தேவன் இயேசுவை உங்களுக்காக மரிக்கும்படி அனுப்பியிருப்பார். இந்த உண்மை உங்களை

நீங்கள் இப்பிரபஞ்சத்தில் ஒரே ஒருவராக இருந்தாலும், தேவன் உங்களுக்காக மரிப்பதற்கு இயேசுவை அனுப்பியிருப்பார்

விடுதலையாக்கும். இவ்வுண்மையானது என்னை விடுதலையாக்கி ஆசீர்வாதத்திற்குள் என்னைக் கொண்டுவருகிறது. எனவே நீங்கள் விடுதலையாக்கப்படுவதற்கு ஜெபிக்கிறேன்.

நாங்கள் அவருடைய அன்பில் வாழ்வதற்காக அழைக்கப்படுகிறோம்.

யூதா 1:1

> *இயேசுகிறிஸ்துவினுடைய ஊழியக்காரனும் யாக்கோபினுடைய சகோதரனுமாயிருக்கிற யூதா, பிதாவாகிய தேவனாலே பரிசுத்தமாக்கப்பட்டவர்களும், <u>இயேசு கிறிஸ்துவினாலே காக்கப்பட்டவர்களுமாகிய அழைக்கப்பட்டவர்களுக்கு</u> எழுதுகிறதாவது,*

தேவன் உங்களை அழைத்த இவ்வழைப்பானது ஒரு நேரத்திற்கான அனுபவம் அல்ல. எமது வாழ்நாள் முழுதும் எம் வாழ்வில் அவருடைய அன்பில் நாம் களிகூறவேண்டுமென அவர் விரும்புகிறார். ஒரு வருடத்தில் 365 நாட்களும் தேவனோடு அவருடைய அன்பில் வாழவேண்டுமென விரும்புகிறார். தேவன் உங்களை எவ்வளவு நேசிக்கிறாரென நீங்கள் அறிந்துகொண்டால், அவருடைய அன்பில் உங்களால் வாழ முடியும்.

ரோமர் 1:2-3

> *ரோமபுரியிலுள்ள <u>தேவப்பிரியரும்</u> பரிசுத்தவான்களாகும்படி <u>அழைக்கப்பட்டவர்களுமாகிய</u> அனைவருக்கும் எழுதுகிறதாவது: நம்முடைய பிதாவாகிய தேவனாலும் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினாலும் உங்களுக்கு கிருபையும் சமாதானமும் உண்டாவதாக.*

நீங்கள் நினைக்கிற எதையும் விட விசாலமான கடலையும் விட தேவனுடைய அன்பு பெரியது. நீங்கள் அந்த அன்பில் வாழ்வதற்கு அழைக்கப்பட்டவர்கள்.

எபேசியர் 3:17-19

> *விசுவாசத்தினாலே கிறிஸ்து உங்கள் இருதயங்களில் வாசமாயிருக்கவும், <u>நீங்கள் அன்பிலே வேரூன்றி, நிலைபெற்றவர்களாகி,</u> சகல பரிசுத்தவான்களோடுங்கூடக் <u>கிறிஸ்துவினுடைய அன்பின் அகலமும், நீளமும், ஆழமும், உயரமும் இன்னதென்று உணர்ந்து, அறிவுக்கெட்டாத அந்த அன்பை அறிந்துகொள்ள வல்லவர்களாகவும்</u>, தேவனுடைய சகல பரிபூரணத்தாலும் நிறையப்படவும், அவர் தமது மகிமையினுடைய ஐசுவரியத்தின்படியே, உங்களுக்கு அநுக்கிரகம்பண்ண வேண்டுமென்று வேண்டிக் கொள்ளுகிறேன்.*

## தேவன் உங்களை நேசிப்பது போலவே இயேசுவும் உங்களை நேசிக்கிறார்

பிதா அவரை நேசிக்கிறது போலவே இயேசுவும் நம்மை நேசிக்கிறாரென்று இயேசு சொல்கிறார். யோவான் 15:9 - ''*பிதா என்னில் அன்பாயிருக்கிறது போல நானும் உங்களில் அன்பாயிருக்கிறேன். என்னுடைய அன்பிலே நிலைத்திருங்கள்''* ஆரம்ப பாடத்தில் தேவன் இயேசுவை நேசித்ததைப் போலவே நம்மையும் நேசிக்கிறாரென்று பார்த்தோம். (யோவான் 17:23) ஆனால் இங்கே தேவன் இயேசுவை நேசித்ததைப் போலவே இயேசு நம்மையும் நேசிக்கிறாரென்று பார்க்கிறோம்.

யோவான் 17:26 இல் : "*நீர் என்மேல் வைத்த அன்பு அவர்களிடத்தில் இருக்கும்படிக்கும், நானும் அவர்களிலிருக்கும்படிக்கும், உம்முடைய நாமத்தை அவர்களுக்கு தெரியப்படுத்தினேன். இன்னமும் தெரியப்படுத்துவேன் என்றார்''* ஆகவே நாம் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் அவருடைய அன்பும் தேவனுடைய அன்பும் தொடர்ந்தும் நமக்குள்ளிருக்கும். நீங்களும், நானும் இப்பூமியில் இருப்பதற்கான ஒரே காரணம் அவருடைய அன்பு தான்.

1 யோவான் 3:1

> *நாம் தேவனுடைய பிள்ளைகளென்று அழைக்கப்படுவதினாலே பிதாவானவர் நமக்குப் பாராட்டின அன்பு எவ்வளவு பெரிதென்று பாருங்கள். உலகம் அவரை அறியாதபடியினாலே நம்மையும் அறியவில்லை.*

இந்த ஆச்சரியமான அன்பை உங்கள் வாழ்விலும் அனுபவித்திடுங்கள்.

இயேசு தன் சீஷர்களுக்கு கூறினார்: *''பிதா தாமே உங்களைச் சிநேகிக்கிறார்''* (யோவான் 16:27) மேலும் இயேசு பறவைகளைப் போஷிக்கும், காட்டுப் புஷ்பங்களை அழகாய் உடுத்துவிக்கும் தேவன் உங்களை குறித்து அதிக கரிசனையுள்ளவராக இருக்கிறாரே என்று கூறினார். அவைகளுக்கு கவலைப்படுவதற்கு எந்த அவசியமும் இல்லை. அவைகளுடைய பரமபிதா அவைகளுடைய தேவைகள் இன்னதென்று அறிந்திருக்கிறாரே. (மத்தேயு 7:11)

இந்த அடிப்படையான ஆரம்ப காரியங்களை நீங்கள் கண்டுகொள்ள வேண்டும். இன்னும் அநேக நேரங்களில் ஜெபத்தின் ஊடாக தேவனிடத்திற்கு நாம் வரும்போது, உண்மையிலேயே அவர் எமது வேண்டுதல்களை நிறைவேற்றுவாரா? என அறியாமல் அவருடைய அன்பையும், கவனிப்பையும், தகப்பனுடைய பராமரிப்பையும் உணராதவர்களாய் இருந்திருக்கக்கூடும். ஆகவே நாம் நம்முடைய அவநம்பிக்கையினால், தேவனை வரையறைப்படுத்துகிறோம் அல்லது கட்டுப்படுத்துகிறோம். நீங்கள் ஜெபிக்கும்போது, நீங்கள் போவது அன்பான பிதாவிடம் என்பதையும் அவர் உங்களை விசாரிக்க

ஆவலாயிருக்கிறார் என்பதையும், அவர் உங்கள்மீது கரிசனையுள்ளவர் என்பதையும் உண்மையில் விசுவாசிக்கிறீர்களா?

தேவனுடைய அன்பிலிருந்து ஒன்றும் உங்களை பிரிக்காது !

ரோமர் 8:37-39

*இவையெல்லாவற்றிலேயும் நாம் நம்மில் அன்புகூருகிறவராலே முற்றிலும் ஜெயம் கொள்ளுகிறவர்களாயிருக்கிறோம். மரணமானாலும், ஜீவனாலும், தேவ தூதர்களானாலும், அதிகாரங்களானாலும், வல்லமைகளானாலும், நிகழ்காரியங்களானாலும், வருங்காரியங்களானாலும், உயர்வானாலும், தாழ்வானாலும், வேறெந்த சிருஷ்டியானாலும் <u>நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவிலுள்ள தேவனுடைய அன்பை விட்டு நம்மை பிரிக்கமாட்டாதென்று</u> நிச்சயித்திருக்கிறோமே.*

உண்மையிலேயே தேவனுடைய அன்பிலிருந்து ஒன்றும் உங்களை பிரிக்க முடியாது. ஏனென்றால் அவர் அன்பாகவே இருக்கிறார்!

உபாகமம் 7:9

*ஆகையால், உன் தேவனாகிய கர்த்தரே தேவன் என்றும், தம்மில் அன்புகூர்ந்து, தமது கற்பனைகளைக் கைக்கொள்ளுகிறவர்களுக்கு அவர் ஆயிரம் தலைமுறை மட்டும் உடன்படிக்கையையும் தயவையும் காக்கிற உண்மையுள்ள தேவன் என்றும்,*

புலம்பல் 3:22

*நாம் நிர்மூலமாகாதிருக்கிறது கர்த்தருடைய கிருபையே, <u>அவருடைய இரக்கங்களுக்கு முடிவில்லை.</u>*

உங்கள் மீது தேவனுடைய அன்பு காணப்படுவதற்கு உங்கள் சார்பில் செய்வதற்கு ஒன்றுமில்லை. அது அவருடைய குணாதிசயம். அவருடைய அன்புக்கு முடிவில்லை.

நாங்கள் முன்னைய பாடத்தில் கற்றுக்கொண்டபடி, இயேசுகிறிஸ்து எம் ஒவ்வொருவருக்காகவும் மரித்தது நாம்,

- பெலனற்று காணப்படும்போது (ரோமர் 5:6)
- பாவிகளாயிருக்கையில் (ரோமர் 5:8)
- தேவனுடைய விரோதிகளாயிருக்கையில் (ரோமர் 5:10)

அவர் அப்படிச் செய்தது அவர் எங்களை அதிகமாக நேசிப்பதால் தான்.

முடிப்பதற்கு முன் கிறிஸ்துவுக்குள் எமது சகோதரனான முருகன் என்பவர் எமது வீட்டுக்கூட்டங்களில் கூறிய ஒரு காரியத்தை நினைவுப்படுத்துகிறேன். ஒரு வாலிபப்பிள்ளை தகப்பனுடைய அன்பை எப்படி காண்பிப்பான்? அந்த தாயும் தகப்பனும் அவர்களுடைய அன்பை அவன் மீது எப்படி காண்பித்தார்களோ அதை பிரதிபலிப்பவனாக இருப்பான். ஆனால் ஒரு வயது பூர்த்தியான ஒரு குழந்தைக்கு பெற்றோருடைய அன்பை புரிந்து கொள்வதும், பெற்றோருடைய முழு வாழக்கையையும் அவனுக்காக அர்ப்பணித்திருப்பதையும் உணர்ந்து கொள்ளமுடிவதில்லை. நாங்கள் கெட்டவர்களாக இருந்தபோதிலும், வேதாகமம் நம்மை பிள்ளைகள் என்கிறது மாத்திரமல்லாமல் எமது பிள்ளைகள் உணராத போதிலும் நாம் அவர்கள் மீது அன்பு செலுத்துவதைப் போல பிதாவினுடைய அன்பும் நம்மீது காணப்படுகிறது.

எப்படி இந்த தேவனுடைய அன்பை நம் உள்ளத்திற்குள் பெற்றுக்கொள்வது?

ரோமர் 5:5

*மேலும் நமக்கு அருளப்பட்ட <u>பரிசுத்த ஆவியினாலே தேவ அன்பு நம்முடைய இருதயங்களில் ஊற்றப்பட்டிருக்கிறபடியால்</u> அந்த நம்பிக்கை நம்மை வெட்கப்படுத்தாது.*

எமது உள்ளத்தில் பரிசுத்த ஆவியானாலே தேவ அன்பு ஊற்றப்பட்டிருக்கிறது. இந்த தேவ அன்பை உங்கள் இருதயங்களில் இன்று உணர விரும்புகிறீர்களா?

இந்த நேரம் நீங்கள் தேவனுடைய அன்புக்காக அவரை நோக்கி பார்க்கும் நேரமாயிருக்கிறது – மற்ற ஒருவரையும் அல்ல. ஆகவே அவர் கட்டளையின்படி ஒருவரையொருவர் நேசிக்கவும் முடிகிறது.

2 தெசலோனிக்கேயர் 2:16-17

*நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவும், நம்மிடத்தில் <u>அன்புகூர்ந்து</u> நித்திய ஆறுதலையும், நல்நம்பிக்கையையும் கிருபையாய் நமக்குக் கொடுத்திருக்கிற நம்முடைய பிதாவாகிய தேவனும் உங்கள் இருதயங்களைத் தேற்றி <u>எல்லா நல்வசனத்திலும் நற்கிரியையிலும் உங்களை ஸ்திரப்படுத்துவாராக.</u>*

தேவனுடைய அன்பை உங்கள் இருதயங்களில் இன்று உணர்ந்திடுவதற்கு நேரம் ஒதுக்குவதற்கு ஆயத்தமாயிருக்கிறீர்களா? நீங்கள் ஆறுதலடைகிறவர்களாகவும், அவரால் தேற்றப்படுகிறவர்களாகவும் இருப்பீர்கள்.

இன்று உங்களைக் குறித்த என் ஜெபம் அதுவாகவே இருக்கிறது.

எபேசியர் 3:19
*‘‘அறிவுக்கெட்டாத அந்த அன்பை அறிந்துகொள்ள வல்லவர்களாகவும், தேவனுடைய சகல பரிபூரணத்தாலும், நிறையப்படவும், அவர் தமது மகிமையினுடைய ஐசுவரியத்தின்படியே, உங்களுக்கு அநுக்கிரகம் பண்ணவேண்டுமென்று வேண்டிக்கொள்கிறேன்’’*